**மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரி - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கல்லூரியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கல்லூரியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கல்லூரியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கல்லூரியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 13 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 96,100 தொகையான உபகரணங்கள், ஆண்டிற்குரிய செலவினமாகக் கருதி கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | ரூபா 96,100 தொகையான பொருட்கள் மற்றும் உபகரணங்களில் இரும்மை வளைத்தல், வெட்டுதல், ஒட்டுதல் போன்ற பிரயோக செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற நுகர்வப் பொருட்களாகும். அதனால் அந்தச் செலவினம் ஆண்டிற்குரிய | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வருடமொன்றை விட அதிக காலமொன்று பயன்பாட்டிற்கு எடுக்கும் எதிர்பார்ப்பில் கொள்வனவு செய்யப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | செலவினமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்கள், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் பல்கலைக்கழக கல்லூரியின் எல்லை வேலி மற்றும் பாதுகாப்புக் கொட்டகை என்பவற்றுக்கு மின்சார இணைப்பை பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 223,262 தொகையான செலவினம் மீண்டெழும் செலவினமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பாதுகாப்பு கொட்டகைக்கு வழங்கப்பட்ட மின்சார இணைப்பு மாணவர்களினதும் ஊழியர்களினதும் பாதுகாப்பிற்கு முறையாக நிலக்கீழ் ஊடாக வழங்குவதற்கும், கல்லூரியின் அலங்காரம் மற்றும் பாதுகாப்பிற்கான வேலிநெடுகிலும் மின் விளக்குகளைப் பொருத்துவதற்கும் அதற்காக மின்சார இணைப்பை பெற்றுக் கொள்வதற்காகவும் இந்த செலவினம் செய்யப்பட்டிருந்தது. அதனால் இந்த செலவினம் மீண்டெழும் செலவினமாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் கல்லூரியின் பயன்பாட்டில் காணப்படுகின்ற 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,357,938 தொகையான 1,500 நூலகப் புத்தகங்கள் பதிவழிக்கப்பட்ட பெறுமதி பூச்சியப் பெறுமதியைக் கொண்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது முறையான குழுவொன்றை நியமித்து அந்த புத்தகங்களின் பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கு விடயங்களின் பிரகாரம் இயலளவு அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செலவின விடய இலக்கம் 2112 இன் கீழ் மூலதன செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க | கல்லூரியின் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் கீழ் இயலளவு அபிவிருத்திக்காக செய்யப்பட்ட சகல செலவினமும் மீண்டெழும் செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்றது. | தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கு விடயங்களின் பிரகாரம் கணக்கீடு செய்ய வேண்டி உள்ளது. |

வேண்டிய போதிலும், ரூபா 1,935,500 பெறுமதியான செலவினம் மீண்டெழும் செலவினமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.5.3 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 45 ஆம் பிரிவின் திறைசேரியின் எழுத்து மூலம் அங்கீகாரத்தின் கீழ் வருடாந்த மதிப்பீடுகளில் ஒரு தலைப்பிலிருந்து இன்னொரு தலைப்பிற்கு நிதியத்தை மாற்றுவதற்கு முடியுமாக இருந்த போதிலும், ரூபா 263,500 தொகையான மூலதன நிதியம் அங்கீகாரமின்றி மீண்டெழும் நிதியங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | கல்லூரியின் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் கீழ் இயலளவு அபிவிருத்திக்காக செய்யப்பட்ட சகல செலவினமும் மீண்டெழும் செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்றது. | தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேணடும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) பல்கலைக்கழக கல்லூரிக்கான இளைஞர் அலுவல்கள் மற்றும் மனித வள அபிவிருத்தி அமைச்சினால் 2014 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட செயல் வழிக் கைநூல் 6(f) ஆம் பிரிவு | பல்கலைக்கழக கல்லூரி விரிவுரையாளர்களினால் ஆகக் குறைந்தது வாரம் ஒன்றிற்கு 25 மணித்தியாலங்கள் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய போதிலும் கற்பித்தல் நடவடிக்கைகள் 3.5 மணித்தியாலங்களுக்கும் 18 மணித்தியாலங்களுக்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | அமைச்சினால் விநியோகிக்ககப்பட்ட செயல்வழிக் கைநூலில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் ஆகக் குறைந்தது வாரமொன்றிற்கு 25 மணித்தியாலங்கள் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக குறிப்பிடப்பட்ட போதிலும் அது 2015 ஆம் ஆண்டின் போது TVEC மற்றும் UNIVOTEC | செயல்வழிக் கைநூலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தரால் 20 மணித்தியாலங்கள் வரை திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | |
| (ஆ) | பல்கலைக்கழக கல்லூரியின் செயல்வழிக் கை நூலின் 4.7.3(ஓ) பிரிவு | ஒவ்வொரு பாடநெறிகளினதும் மாணவர்களுக்காக நாளாந்தம் இடம்பெறுகின்ற விரிவுரைகள் மற்றும் பிரயோக பயிற்சி நடவடிக்கைகளைச் செய்வதற்காகவும் விரிவுரைகளை மேற்பார்வை செய்து அறிக்கை இடுவதற்காக செயல்முன்னேற்ற அறிக்கை பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் நாளாந்த கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பாட மேற்பார்வை என்பன நலிவான நிலையில் காணப்பட்டது. | இந்த ஆறு மாதத்திற்கான செயல்முன்னேற்ற அறிக்கை புத்தகத்தை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மேற்பார்வை நடவடிக்கைகளுக்கும் எதிர்காலத்தில் உரிய முறையில் மேற்கொள்ளப்படும். | கிடைக்கப்பெற்ற அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 627,212 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,356,875 ஆகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 5,729,663 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீண்டெழும் மானியம் ரூபா 11,069,100 தொகை மேலதிகமாக கிடைத்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 யூலை முதல் திசெம்பர் வரை ஆறு மாதத்திற்காக 08 பாடநெறிகள் 2,910 மணித்தியாலங்கள் விரிவுரைகளும் 1,295 மணித்தியாலம் பிரயோக பயிற்சிகளும் 28 வெளிவாரி விரிவுரையாளர்கள் மூலம் மேவுகை செய்வதற்கு | இதில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நியமனக் கடிதத்தில் மேவுகை செய்யப்பட வேண்டிய பாடங்களைக் கற்பிக்கக்கூடிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் | நியமனக் கடிதத்தில் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இது உடன்படிக்கை செய்யாமையினால் நிபந்தனைகளை முறித்தல் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்டு அதற்காக நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருந்த போதிலும், வெளிவாரி விரிவுரையாளர்களினால் மேவுகை செய்யப்பட வேண்டிய பாடங்கள், கற்பிக்கக்கூடிய மணித்தியாலங்களுக்காக செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் ஏனைய நிபந்தனைகளை உள்ளடக்கி இருதரப்பினராலும் நிபந்தனைகளை உள்ளடக்கி இருதரப்பினராலும் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | ஏனைய நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2018/07/25 ஆந் திகதி முதல் ஆரம்பமாகிய ஆறு மாதங்களுக்காக மாத்திரம் 2018/07/23 ஆந் திகதி முகாமைத்துவத் திணைக்களத்திலிருந்து கிடைத்த கடிதத்தின் பிரகாரம் குறித்த கட்டணம் ஒன்று தீர்மானிக்கப்படும் வரை கட்டணமின்றி நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருந்தது. | சட்டரீதியான ஆவணம் இல்லாமையினால் உடன்படிக்கைக்கு இணங்க வேண்டும். |
| (ஆ) | சுற்றுலா சேவை முகாமைத்துவ பாடத்தை மேவுகை செய்வதற்கு 06 வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவை பெறப்பட்டு 152 விரிவுரை மணித்தியாலங்களும் 02 மணித்தியால பிரயோக பயிற்சியும் நடாத்தப்பட்டிருந்ததுடன் அவர்களில் 02 பேர்களுக்கான நியமனம் முறையான பிரகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றுலா சேவை முகாமைத்துவ பாடத்தை மேவுகை செய்வதற்காக ஆறு வெளிவாரி விரிவுரையாளர்களில் நான்கு பேர்களுக்கு முறையான பிரகாரம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன் நேர்முகப் பரீட்சைக்காக சமூகமளிக்காத இரண்டு விரிவுரையாளர்களுக்காக நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவர்களுக்காக நேர்முகப் பரீட்சை நடாத்தி நியமனக் கடிதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நேர்முகப் பரீட்சை நடாத்துதல் நியமனக் கடிதம் வழங்குவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2018 யூலை முதல் திசெம்பர் வரையான காலத்தில் NVQ 05 இல் இரண்டாம் மற்றும் NVQ 06 இல் முதலாம் ஆறு மாதங்களுக்குரிய 07 பாடநெறிகளுக்கு வெளிவாரி விரிவுரையாளர்களை வருவித்து கற்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த பிரயோக பயிற்சிக் காலத்தில் 48 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் நிறைவேற்றப்படவில்லை. | வெளிவாரி விரிவுரையாளர்களின் மணித்தியாலத்திற்கான வேதனம் குறிப்பாக குறிப்பிடப்படாமையினால் அவர்கள் சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்தனர். 2019 ஆம் ஆண்டில் முதலாம் மற்றும் இரண்டாம் ஆறுமாதகாலத்தின் போது தவறவிடப்பட்ட பாடங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எந்தவொரு பாடநெறிகள் பாடவிதானத்தை அந்தந்த கால அட்டவணையின் பிரகாரம் பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) 2018 சனவரி முதல் யூன் வரையான கற்கைக் காலத்தின் போதும், 07 பாடநெறிகளுக்காக வெளிவாரி விரிவுரையாளர்கள் மூலம் 2,230 விரிவுரை மணித்தியாலங்களும், 1,244 பிரயோக பயிற்சி மணித்தியாலங்களும் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 1,134 விரிவுரை மணித்தியாலங்களும், 212 பிரயோக பயிற்சி மணித்தியாலங்களும் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் விரிவுரை மற்றும் பிரயோக பயிற்சி மணித்தியாலங்களின் மேவுகை 51 சதவீதம் மற்றும் 19 சதவீதம் ஆக இருந்தன. | மேற்கூறப்பட்ட பாட சிபாரிசுகளில் விரிவுரை மற்றும் பிரயோக கற்கைகளை நடாத்தும் போது நேரடி மற்றும் சுய கற்கை மூலம் மேவுகை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக சுய பிரயோக பரிசோதனை சுய மதிப்பீட்டு பத்தகங்களின் மூலம் மேற்கூறப்பட்டவைகள் நிறைவேற்றப்படாமல் மணித்தியால எண்ணிக்கை மேவுகை செய்யப்பட்டுள்ளது. | சுய கற்கை மூலம் மேவுகை செய்வதாயின் அந்த பாடப்பகுதிகள் கால அட்டவணைகளில் உள்ளடக்கி அந்த பாடங்களுக்காக விரிவுரையாளர்களை ஈடுபடுத்துதல் தேவையற்றதாகும். |
| (உ) மீளாய்வாண்டில் யூலை முதல் திசெம்பர் வரையான கற்கைக் காலத்தின் போது வெளிவாரி விரிவுரையாளர்கள் மூலம் 08 பாடநெறிகளில் 2,915 மணித்தியால விரிவுரைகளையும், 1,295 மணித்தியால பிரயோக பயிற்சிகளையும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 1,884 மணித்தியால விரிவுரைகளும், 391.75 மணித்தியால பிரயோக பயிற்சியும் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மேவுகை செய்யப்படாதிருந்த விரிவுரை மற்றும் பிரயோக பயிற்சி மணித்தியாலங்களின் அளவு முறையே 65 சதவீதம் மற்றும் 30 சதவீதம் ஆக இருந்தன. | இரண்டாவது ஆறு மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் காரணமாக வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவையை பெற்றுக்கொள்ளல் கஷ்டமாயிருந்ததுடன் மேற்கூறப்பட்ட ஆறு மாதத்தில் விரிவுரை மற்றும் பிரயோக பயிற்சிகளுக்காக மேவுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆறு மாதத்தின் போது உரிய பாடநெறிகளுக்காக இணைக் கையளித்தல் மூலம் மேவுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆறு மாதங்களின் போது இந்த மாணவர்கள் உயர்ந்த மட்டத்தை அடைவதுடன் NVQ 6 மட்டத்தில் மாணவர் பாடநெறிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஆறு மாதத்தின் போது குறித்த பாடப்பகுதிகள் மேவுகை செய்யப்பட வேண்டியுள்ளது. |

## 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாணவர்களின் பிரயோக செயற்பாடுகளுக்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் சுயமாக செயற்பட்டு தொழில்நுட்ப பிரிவிற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா | இந்த (5, 9, 19, 21 என்ற இலக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள) உபகரணங்களுக்காக தேவையான மின்சாரத்தை | தேவையினை இனங்கண்டு அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் |

| | | | |
|---|---|---|---|
| | 3,654,840 பெறுமதியான உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கல் தற்போது அமைக்கப்பட்டிருந்ததுடன் முறையானதும் பாதுகாப்பானதாகவும் நீரை வழங்கல் மற்றும் சூடான நீர், கழிவு நீர் என்பவற்றை முறையாக அகற்றுவதற்கு முடியுமான வகையில் ஆய்வு கூடத்தில் நீர்க்குழாய் முறைமையொன்றை அமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிரயோக செயற்பாடுகளின் மூலம் மற்றும் இயலுமையைப் பூர்த்தி செய்த தரப்பை உருவாக்குவதற்காக மாணவர்களை பிரயோக செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். |
| (ஆ) | மாணவர்களின் பிரயோக கற்கை நடவடிக்கைகளுக்காக 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,256,268 தொகையான பயிற்சி உபகரணங்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் பிரயோக பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட இடவசதிகள் போதாமை பாரிய இடையூறாகக் காணப்பட்டதுடன் வரையறுக்கப்பட்ட இடவசதி நிலைமையின் கீழ் காணப்பட்ட போதும், Wheel balancing Machine / pedestal grinder என்ற உபகரணம் தேவையின் பிரகாரம் பயன்படுத்தப்படுகின்றது. | பாட பரிந்துரை பகுதிகள் செய்முறை செயற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்படுவதில் பொருத்தமான நபர்களை சமூகத்திற்கு பங்களிக்க முடியுமாகையால் அந்த பாடப் பகுதிகள் அதன் பிரகாரம் மேற்கொள்ளுதல் அவசியமானதாகும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.1.1(இ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் ரூபா 2,126,125 தொகையான மூலதன சொத்துக்கள் நிதிஏற்பாடின்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டின் செலவினத்திற்காக திறைசேரி மூலம் எமது நிறுவனத்திற்கு ரூபா 12 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிஏற்பாட்டில் எமது நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. எனினும், 2018 ஆம் ஆண்டில் திறைசேரி மூலம் பணம் விடுவிக்காமையினால் கொள்வனவு செய்யப்பட்ட மூலதனப் பொருட்கள் சிலவற்றுக்காக பணம் செலுத்துவதற்கு முடியாதிருந்தது. | நிரந்தரமாக நிதிஏற்பாடு கிடைக்கப்பெற்றதா என ஆராய்ந்து கொள்வனவுகளைச் செய்ய வேண்டியுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் பல்கலைக்கழக கல்லூரியில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக உள்ளக கணக்காய்வும் இடம்பெற்றிருக்கவில்லை. | எமது நிறுவனத்தில் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இல்லாமையினால் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றைத் தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. அதனால் உள்ளகக் கணக்காய்வையும் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் இது தொடர்பாக உரிய நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீ.ஈ.டீ 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கல்லூரியினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எமது நிறுவனத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இல்லாமையினால் 2017 ஆம் ஆண்டிற்காக தொழில்சார் தொழில்நுட்ப கல்லூரியில் காணப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுடன் இணைக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு தாபிக்கப்பட வேண்டும். |